
ST BERTILLA
NOVEMBER 5
Good News

## *புனித பெர்த்தில் (-705)*

பிரான்ஸ் நாட்டில் பிறந்த இவள் துறவியானாள். இவளது விவேகத்தைக் கண்டு இவளுக்கு முக்கியமான வேலைகளை கொடுத்தார்கள். அந்நியரை உபசரிப்பது, நோயாளிகளை பராமரிப்பது, மடத்தில் கல்வி பயின்ற சிறுவர்களைக் கண்காணிப்பது, இவை போன்ற வேலைகள் ஒன்றன்பின் ஒன்றாய் இவளுக்குக் கொடுக்கப்பட்டன. இந்த வேலைகளை சிறந்த விதமாய் இவள் செய்தமையால் மடத்தில் உபதலைவியாக நியமனம் பெற்றாள்.

கன்னியர்களுக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து வந்த தூயவள். கன்னியரை நன்கு நடத்தி வந்தாள். இந்த செய்தி எங்கும் பரவியது. அரசிகள் முதலாய் வெளி நாடுகளில் இருந்து அந்த மடத்திற்கு வந்து துறவிகளாக வாழ்வு நடத்தினர் என்றாலும் இவள் வெகு தாழ்ச்சியுடன் இருப்பாள். 46 ஆண்டுகளாக மடத்தை முன் மாதிரிகையில் ஆண்டு வந்து முதிர் பிராயத்திலும் ஆர்வத்துடன் உழைத்தாள்.

**சிந்தனை:**

நமது வேலை உண்மையான பலன் கொடுக்க வேண்டுமானால் நம்மிடம் தாழ்ச்சி இருக்க வேண்டும். நாம் பயனற்ற ஊழியர்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

**செபம்:**

ஆண்டவரே, மனத் தாழ்ச்சியையும் மதுர குணத்தையும் தலைவர்கள் அனைவருக்கும் தாரும்.